தமிழ் / TAMIL

தாள் II / Paper II

(இலக்கியம்) / (LITERATURE)

கால அளவு : **மூன்று** மணி நேரம் *Time Allowed : **Three** Hours*	மொத்த மதிப்பெண்கள் : **250** *Maximum Marks : **250***

வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடர வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions :

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

The number of marks carried by a question / part is indicated against it.

*Answers must be written in **TAMIL**.*

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

Optional Province · optionalprovince.com

SECTION A

Q1. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) குறிஞ்சித் திணையின் நில அடையாளம் யாது ? இரண்டு குறுந்தொகைப் பாடல்கள் வழி அவ்வடையாளம் வெளிப்படுவதைக் காட்டுக. *10*

(b) பொருண்மொழிக் காஞ்சி என்றால் என்ன ? நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக. *10*

(c) கும்பகருணனை எழுப்பச் சென்ற கிங்கிரர் வெகுளியால் கூறுவனவற்றை எடுத்துரைக்க. *10*

(d) நீத்தல் விண்ணப்பம் வேண்டி மாணிக்கவாசகர் முன் வைக்கும் வேண்டுதலை இரண்டு பாடல்கள் வழி விளக்குக. *10*

(e) தெய்வப் புலவர் கடை அறிவுடைமையின் தனித்தன்மைளை விளக்குக. *10*

Q2. (a) மாதவி கோவலனுக்கு எழுதிய முடங்கலின் சிறப்பினை எடுத்துரைக்க. *20*

(b) திருப்பாவையில் பொதிந்து கிடக்கும் தமிழ் அழகியல் கூறுகளை வெளிப்படுத்துக. *15*

(c) பாரி மகளிரை விச்சிக்கோனுழைக் கொண்டு சென்ற கபிலர் கூற்றை விவரிக்க. *15*

Optional Province · optionalprovince.com

Q3. (a) கண்ணகி தனது வழக்குரையில் கூறிய நீதி நுட்பங்களை எடுத்துரைக்க. *20*

(b) திருக்குறள் கூறும் மேலாண்மையியல் சிந்தனைகளை நும் பாடப்பகுதிக் கொண்டு விளக்குக. *15*

(c) குறுந்தொகைப் பாலைத்திணையில் தலைவி மற்றும் தோழி எவ்வாறு சித்தரிக்கப்படுகிறார்கள். *15*

Q4. கிழ்க்காணும் பாடலடிகளின் இடம், பொருள் மற்றும் நயத்தையும் விளக்குக :

(a) "கள்ளச் சகடம் கலக்கு அழியக் கால் ஓச்சி
வெள்ளத்து அரவிந் துயில் அமர்ந்த வித்தினை" *20*

(b) "மடைமாண் செப்பில் தமிய வைகிய
பொய்யாப் பூவின் மெய் சாயினளே" *15*

(c) "கூற்றமும் நின்றது, எம்மைக்
கொல்லிய விதியும் நின்ற" *15*

Optional Province · optionalprovince.com

SECTION B

Q5. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) கண்ணன் - என் தோழனின் தனித்துவத்தைப் புலப்படுத்துக. *10*

(b) குடும்ப விளக்கில் தனி இல்லம் குறித்த நகைமுத்துவின் கருத்தை எடுத்துரைக்க. *10*

(c) பிச்சைக்காரனின் தோற்றத்தையும் இயல்பையும் ஜெயகாந்தன் எவ்வாறு வருணிக்கிறார் ? *10*

(d) மு. வரதராசனார் குறுகிய நோக்கங்களாகக் கூறுவனவற்றை எடுத்துக் காட்டுக. *10*

(e) தமிழக நாட்டுப்புற நம்பிக்கைகள் வழி அறியலாகும் தமிழர் அறிவியல் அறிவு மரபை வெளிப்படுத்துக. *10*

Q6. (a) 'யாருக்கும் வெட்கமில்லை' நாடகத்தில் வெளிப்படும் நகைச்சுவை உணர்வை விவரிக்க. *20*

(b) 'முத்துப்பட்டன் கதை' வெளிப்படுத்தும் சமூகப் புரட்சிச் சிந்தனைகளை வெளிப்படுத்துக. *15*

(c) முதியோர் நிலையை நா. காமராசன் எவ்வாறு காட்டுகிறார் ? *15*

Optional Province · optionalprovince.com

Q7. (a) 'சித்திரப்பாவை'யில் கையாளப்பட்டிருக்கும் பெண்ணியச் சிந்தனைகளை விளக்குக. *20*

(b) கண்ணன் பாட்டை மாற்றுக் கோணத்தில் திறனாய்வு செய்து ஒரு கட்டுரை எழுதுக. *15*

(c) கம்பர், இளங்கோ, வள்ளுவர் ஆகியோர் குறித்து அறிஞர் அண்ணா கூறியதை எடுத்துரைக்க. *15*

Q8. (a) குடும்ப விளக்கில் காணும் நான்கு தலைமுறைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக. *20*

(b) ஒரு பிச்சைக்காரன் குருவான கதையை ஜெயகாந்தன் எவ்வாறு எடுத்துரைக்கிறார் ? *15*

(c) காகிதப் பூக்களாக நா. காமராசன் குறிப்பிடுவோர் பற்றி ஒரு கட்டுரை வரைக. *15*

Optional Province · optionalprovince.com